# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● மார்ச் 19, 2022

Weekly E-paper ● March 19, 2022




# பொருளாதாரமும் சமூக நீதியும்!

சுப.வீரபாண்டியன்

## ஆளுநர் அடக்கி வாசிக்க வேண்டும்!

வெற்றிச்செல்வன்

## சமூக நீதியின் முதல்வர்!

தலையங்கம்

## மீண்டும் மேகதாது அணைத் திட்டம்

சாரதாதேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● மார்ச் 19, 2022 Weekly E-paper ● March 19, 2022


# பொருளாதாரமும் சமூக நீதியும்!

சுப.வீரபாண்டியன்

ஓர் அரசின் நிதிநிலை அறிக்கை வெளியிடப்படும்போது, அதனை ஆளும் கட்சி மற்றும் கூட்டணிக் கட்சியினர் வரவேற்பதும், எதிர்க்கட்சியினர் எதிர்ப்பதும் இயல்பானவை! ஆனால் இம்முறை தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையை வேறு சிலரும் வரவேற்றுள்ளனர்.

'டெக்கான் கிரானிக்கல்' ஏடு *TN's Budget Transparency'* என்ற தலைப்பில் ஒரு தலையங்கம் எழுதியுள்ளது. "பொருளாதாரமும், சமூக நீதியும் சம அளவில் முதன்மை பெற்றுள்ள நிதிநிலை அறிக்கை" என்று அந்த ஏடு சொல்கிறது. சுருக்கமாகச் சொன்னால் அதுதான் திராவிட மாடல் என்பதை நாம் அறிவோம். அதனைத்தான் அந்த ஏடு எதிரொலித்துள்ளது.

எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி, சமூக வலைத்தளத்தில் தன் கருத்தைப் பதிவு செய்துள்ளார். "நான் 1952 முதல் வாக்களித்து வருகின்றேன். நான் பார்த்ததிலேயே மிகச் சிறந்த பட்ஜெட், இன்று தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த பட்ஜெட்தான். அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கியதாக இருக்கிறது, இந்த பட்ஜெட்.......ஒரு பட்ஜெட் எப்படி இருக்க வேண்டும் என ஒன்றியத்திற்கே கற்றுக் கொடுப்பதாக இந்த பட்ஜெட் இருக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார் அவர்.

இப்படிப் பலரும் பாராட்டுவதற்குரியதாக நிதிநிலை அறிக்கை இருப்பதற்கு அடிப்படையான காரணங்கள் பல இருக்கின்றன. குறிப்பாக ஒன்றை நாம் சொல்லலாம். கல்வி, மருத்துவத்தை உள்ளடக்கிய மக்கள் நலம் ஆகிய இரண்டு துறைகளுக்கும்தான் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வித் துறைக்கு மட்டும் 42 ஆயிரம் கோடிக்கு மேல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



**"அண்ணாமலையும் இந்த நிதிநிலை அறிக்கையை எதிர்க்கின்றார்களே என்று கேட்கத் தோன்றும். அதுவும் ஒரு விதத்தில் தமிழ்நாடு அரசுக்கு கிடைத்துள்ள சான்றிதழ்தான்!"**

அதிலும், பள்ளிக் கல்விக்கு 36 ஆயிரம் கோடி தரப்பட்டுள்ளது.

அதே போல ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல், மருத்துவம், மக்கள் நல்வாழ்வு ஆகியனவற்றிற்கு, ஏறத்தாழ 65 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய மக்கள் நலத் திட்டங்கள் ஒருபுறமிருக்க, மீண்டும் சமத்துவபுர வீடுகள், பிற மொழிகளில் பெரியாரின் நூல்கள் என்பன போன்ற கொள்கைவழித் திட்டங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. அண்ணல் அம்பேத்கரின் எழுத்துகள் பல்வேறு மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளதைப் போல, தந்தை பெரியாரின் எழுத்துகளும் பிற மொழிகளுக்குக் கொண்டு செல்லப்படுமானால், சமூக மாற்றத்திற்கு அது வழி வகுக்கும். குறிப்பாக, வடஇந்தியாவில் ஒரு விழிப்புணர்வை அது ஏற்படுத்தக் கூடும்!

ஆனால், முன்னாள் முதலமைச்சர் எடப்பாடியும், அண்ணாமலையும் இந்த நிதிநிலை அறிக்கையை எதிர்க்கின்றார்களே என்று கேட்கத் தோன்றும். அதுவும் ஒரு விதத்தில் தமிழ்நாடு அரசுக்கு கிடைத்துள்ள சான்றிதழ்தான்! ●

# ஆளுநர் அடக்கி வாசிக்க வேண்டும்!

வெற்றிச்செல்வன்



**மாநில ஆளுநர் என்பவர் ………… ஆங்கிலேயர் விட்டுச் சென்ற ஏகாதிபத்தியத்தின் கடைசிச் சின்னம். இந்திய நாட்டின் விடுதலைக்குப் பின்னரும் நம்மால் அறுத்தெரிய முடியாத ஓர் அடிமைப் பந்தம்.** - கு. ச. ஆனந்தன் (மலர்க மாநில சுயாட்சி, பக்கம் 161).

கடந்த 11.03.2022 அன்று, கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தில், தென்மண்டலத் துணைவேந்தர்கள் மாநாட்டினைத் தொடக்கி வைத்துப் பேசிய தமிழக ஆளுநர் ஆர்.அன். ரவி, பா.ஜ.க.-வின் செய்தித் தொடர்பாளர் போலவும், மோடியின் ஊதுகுழலாகவும் பேசியிருக்கிறார். இந்தியா வளர்ச்சி அடையாததற்கு நேருவே காரணம் என்று மேடைதோறும் மோடி பாடி வரும் பாட்டைக் கோயம்புத்தூரில் இம்முறை மோடியின் சார்பாகப் பாடியிருக்கிறார் ஆளுநர்.

விடுதலைக்குப் பின்னர் 65 ஆண்டுகளாக இந்தியாவை ஆட்சி செய்தவர்கள், ஆங்கிலேய அரசின் காலனிய மனப்பாங்கிலேயே செயல்பட்டதாகவும், அதன் காரணமாக சமச்சீரற்ற முன்னேற்றம் ஏற்பட்டதாகவும், மாநிலங்களுக்கிடையே சீரற்ற வளர்ச்சி ஏற்பட்டதாகவும் பேசியுள்ள ஆளுநர், 2014-இல் பதவியேற்ற பிரதமர் மோடி, பழைய பார்வையிலிருந்து விடுபட்டுப் புதிய பார்வையுடன் இந்தியாவை அணுகினார் என்றும் பேசியிருக்கிறார் ஆளுநர். மோடியின் திட்டங்களையெல்லாம் வானளாவப் புகழ்ந்துள்ளார்.

மேலும், பாரதம் என்ற பெயரால் அரசியலமைப்பில் சுட்டப்பெறும் இந்தியா, பழங்காலத்திலிருந்தே காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரை ஒரே நாடாக இருந்தது என்றும், 1947-இல் இந்தியா என்பது உருவானதில்லை என்றும், ஐக்கிய அமெரிக்க நாடுகளைப் போல (United States of America) ஓர் ஒப்பந்தத்தினால் இந்தியா உருவாகவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

இந்தியா, பல்வேறு தேசிய இனங்களின் கூட்டமைப்பு என்பதை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். இந்தக் கருத்தியலே இந்தியாவின் பன்முகத் தன்மையைக் காப்பாற்றும். இந்தியா ஒரு தேசமென்பதை, அத்தகைய கற்பிதத்தைத் தந்தை பெரியார் தொடர்ந்து மறுதலித்துள்ளார். திராவிட இயக்கமும் தொடர்ந்து இதைக் கேள்விக்கு உட்படுத்தியுள்ளது. இந்நிலையில், மீண்டும் மீண்டும் ஒரே நாடு, ஒரே கலாச்சாரம்,ஒரே மொழி என்று பா.ஜ.க. பரிவாரங்கள் தொடர்ந்து பெசி வருவதில் பொருள் ஏதுமில்லை.

இந்தியா உண்மையான கூட்டாட்சியாக (Federation) இல்லை; மாநிலங்கள் மாநகராட்சிகளைப் போல நடத்தப்பெறுகின்றன; மாநிலங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதன் மூலமே இந்தியா உண்மையான கூட்டாட்சியாகத் திகழும்; அதற்குத் தேவையான திருத்தங்களை அரசியலமைப்பில் கொண்டு வர வேண்டும் என்பதே நமது நிலைப்பாடு. அது மட்டுமே, பல்வேறு மொழி, கலாச்சாரம் (Multi-linguistic, Multi-cultural) ஆகியவற்றைக் கொண்ட இந்தியா ஒன்றுபட்டு இருப்பதற்குத் துணை புரியும்.

இவையனைத்தையும் மறந்து விட்டு, ஒரே நாடு, ஒரே கலாச்சாரம் என்ற கருத்தை நமது மூளைக்குள் திணிப்பதை ஆளுநர் கைவிட வேண்டும்.

முதலமைச்சர் உள்ளிட்டவர்களைக் கொண்ட அமைச்சரவையின் அறிவுரையின் பேரிலேயே ஆளுநர் செயல்பட வேண்டும் என்கிறது அரசியலமைப்பு (Article 163 There shall be a council of Ministers with the Chief Minister at the head to aid and advice the Governor in the exercise of his functions). எதற்கெடுத்தாலும் அரசியலமைப்பை மேற்கோள் காட்டும் ஆளுநர், இந்த விதியைப் படித்தாரா என்பது நமது கேள்வி. நீட் விஷயத்தில், மக்கள் பிரதிநிதிகளின் ஒன்றுபட்ட குரலைப் புறந்தள்ளிய ஆளுநர் அரசியலமைப்பைப் பற்றி பேசுவதற்கு அருகதை அற்றவர்.

பா. ஜ. க. ஆட்சியில் இல்லாத மாநிலங்களில், ஆளுநர்களின் மூலம் தொடர்ந்து ஆட்சி நிர்வாகத்திற்கு இடையூறு செய்து வருகிறது ஒன்றிய அரசு. தற்போது மகாராஷ்டிர மாநிலத்தில் நடைபெற்று வருவதும் ஆளுநர் Vs ஆளும் மாநில அரசுக்கிடையேயான மோதல்தான். இதனால்தான் ஆளுநர்களை ஒன்றிய அரசின் கங்காணி என்று தன்னுடைய 'மலர்க மாநில சுயாட்சி' நூலில் கடுமையாக விமர்சித்துள்ளார் கு. ச. ஆனந்தன்.

ஆனால், தமிழக மண்ணில் பா.ஜ.க.வின் நரித்தனங்கள் எடுபடாது. **"மத்திய அரசோடு கருத்து மாறுபடக் காங்கிரசல்லாத அரசுகளுக்கு எல்லா உரிமையும் உண்டு. ஏதோ ஒற்றர்களை வைத்திருப்பது போல, கவர்னர்களை வைத்திருப்பது ஆட்சேபிக்கத்தக்கதாகும். தாம் மட்டுமே தேச பக்தர்கள் என்றும், அரசியல் சட்டத்தைக் காப்பது நமக்கு மட்டுமே உள்ள கடன் என்றும் கவர்னர்கள் கருதக்கூடாது"** என்று 1969-லேயே நாடாளுமன்றத்தில் முழங்கிய கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்*. இந்தியாவின் பன்முகத் தன்மைக்கு எதிராக ஆளுநர் பேசி வருவதைத் தமிழ்நாடும், தி.மு.க.-வும் ஒருநாளும் ஏற்காது.

*(தி.மு.க.-வின் நாடாளுமன்ற உறுப்பினர் செ. கந்தப்பன், 10.03.1969-இல் நாடாளுமன்றத்தில் பேசியது; நெஞ்சுக்கு நீதி, இரண்டாம் பாகம், பக்கம் 67).

●

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## சமூக நீதியின் முதல்வர் !

ஆவடிப் பகுதியைச் சேர்ந்த நரிக்குறவர் சமூகத்தின் திவ்யா, பிரியா, தர்ஷினி ஆகிய மூன்று மாணவிகளின் பேச்சு சமூக ஊடகங்களில் பரவிய நிலையில், அது தமிழக முதல்வரின் கவனத்திற்கும் சென்றது.

அந்த மூன்று மாணவிகளையும் தலைமைச் செயலகத்திற்கு அழைத்துப் பேசினார் முதல்வர் .

அப்போது அந்தக் குழந்தைகள் ஏழ்மையில் இருக்கும் தங்கள் சமூகத்திற்கும், தங்கள் படிப்புக்கும் உதவி செய்ய முதல்வரிடம் வேண்டுகோள் வைத்தனர்.

குழந்தைகள் பேசுகிறார்கள். அவர்களுக்கு எதிரில், நின்று கொண்டு, குழந்தைகளைப் பார்த்தபடி, சற்று தலையும், உடலும் குனிந்தபடி அந்த மூன்று குழந்தைகள் பேசுவதைக் கேட்கும் நான்காவது குழந்தையைப் போல இருந்தாரே, அவரா நம் முதல்வர் !

ஆம் ! உலகின் புகழ் பெற்ற இதழ்களால் வியப்போடு பேசப்பட்டவர், ஒன்றிய அரசின் தலைவர்களால் உயர்த்தப்படுபவர், அரசின் நிர்வாகத்தைக் கைப்பிடியில் வைத்துக் கொண்டு நாளுக்கு நாள் மக்களின், நாட்டின் வளர்ச்சியை முன்னெடுத்து வரும் முதல்வர், “கருணாநிதியை விட ஆபத்தானவர்” என்று சங்கிகளைக் கதற விட்ட அந்தத் தலைவர் இங்குக் குழந்தையைப் போல் பேசுகிறார்!

அந்தக் குழந்தைகளின் வேண்டுகோளை ஏற்கிறார் முதல்வர்.

அடுத்த நாளே அந்த நரிக் குறவர் சமூகம் வாழும் மக்களுடன் இருந்த ஆவடி நாசர் கைபேசி மூலமாக வீடியோவில் பேசுகிறார் முதல்வர். “நான் அங்கே வருகிறேன், சாப்பாடு கொடுப்பீர்களா?” என்ற முதல்வரின் குரலைக் கேட்ட அந்த மக்கள் “நீங்க வாங்க, விருந்தே போடுறோம் “ என்று எல்லையற்ற மகிழ்ச்சியில் பேசினார்களே! அவர்கள் அப்படிப் பேசும் போது, ஓர் இணையற்ற தலைவரிடம் பேசுகிறோம் என்ற அச்சம் துளியும் இல்லாமல் தம் நண்பரிடம் பேசுவதைப் போலல்லவா இருந்தது அந்தக் காட்சி!

இவர் தமிழக முதல்வரா? மக்களின் முதல்வரா? எளிமையின் முதல்வரா? மனசாட்சியின் முதல்வரா....?

சேர்த்துச் சொல்வோம், சமூக நீதியின் முதல்வர், தலைவர்.

# இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம் மூன்று நூல்கள் அறிமுகம்



“பாசிசமே பார்ப்பனியம் “ தோழர் சுப.வீரபாண்டியன் உரை




“திராவிடர் விவசாயத் தொழிலாளர் சங்கம்” தோழர் சுந்தரவள்ளி, “ஆதிப்பெண்ணின் அடி தேடி “ தோழர் மா.உதயகுமார் ஆகியோர் உரை



இனமானப் பேராசிரியர் படிப்பு வட்ட ஒருங்கிணைப்பாளர் மதிவாணன் தலைமையில், தோழர் காசு. நாகராசன் வரவேற்புரை



தோழர் ஜெய்சூர் தொகுப்புரை, ஒருங்கிணைப்பாளர் சரவண பெருமாள் நன்றியுரையுடன் அறிமுக அரங்கம் நிறைவுற்றது.

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்

உதவி ஆசிரியர்கள்:
உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com

மின் அஞ்சல்: karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408

# மீண்டும் உயிர் பெறும் மேகதாது அணைத் திட்டம்

சாரதா தேவி

ஒவ்வொரு முறையும் தமிழ்நாட்டின் எதிர்ப்பால் மேகதாது அணை கட்டுவதைத் தள்ளிப் போட்ட கர்நாடக அரசு, 4.3.2022 அன்று வெளியிட்ட வரும் நிதி ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் அணை கட்ட ரூ.1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மொத்தம் ரூ.9000/- கோடி திட்டத்தில் முதல் தவணையாக ரூ.1000/- கோடியை ஒதுக்கி இருப்பது அவர்கள் அணை கட்டுவதைத் தீவிரப்படுத்துவதை உணர்த்துகிறது. தமிழ் நாட்டு அமைச்சர் பெருமக்கள் உடனடியாக எதிர்ப்புக் குரலைப் பதிவு செய்துள்ளார்கள்.

கர்நாடக மாநிலம், குடகு மலையில் உற்பத்தி ஆகும் காவிரி ஆறு பெரும்பான்மையாக, தமிழ்நாட்டு நிலத்தில் ஓடும் ஒரே பெரிய ஆறு. தமிழகத்தில் 1.5 கோடி மக்கள் தம் குடிநீருக்காகவும், 1 கோடி பேர் வேளாண்மைக்காகவும் காவிரி ஆற்றை நம்பி உள்ளனர். அதில் 30 லட்சம் பேர் சிறு குறு விவசாயிகள். உலகெங்கிலும் ஆற்று நீர்ப் பங்கீட்டு உரிமை, வெள்ளம் வந்தாலும் வறட்சி வந்தாலும் அதிகமாக பாதிக்கப்படும் கடைசி நிலப்பகுதிக்கே என்பது பன்னாட்டு வழிகாட்டுதல். அதனால்தான் தமிழ் நாட்டின் எதிர்ப்பு இங்கே கவனம் கோருகிறது.

கர்நாடக அரசியல்வாதிகள், எந்த அரசு அமைந்தாலும், ஒரு வகையில் காவிரி நீரை தமிழக மக்களுக்குக் கொடுக்காமல் இருப்பதையே அரசியலாக முன்னிறுத்துகின்றனர். கழக அரசுகள் அமைந்த பின் 1989-ல் காவிரி நடுவர் மன்றம் அமைக்கப்பெற்றது. 1997-ல் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப் பெற்றது. இவை போதாமல் அவ்வப்போது உச்ச நீதிமன்றத்திலும் வழக்குகள் போடப்படுகின்றன. 575 டி.எம்.சி தண்ணீர் பங்கீட்டு உரிமை கர்நாடகத்தின் அடாவடியால் தேய்ந்து 192 டி.எம்.சி ஆனது. அந்த அளவைக் கூட கர்நாடகம் வடகிழக்குப் பருவமழையின் போது உண்டாகும் உபரி நீரை வெளியேற்றி கணக்குக் காண்பித்துக்கொள்கிறது.

ஏற்கனவே கட்டப்பட்டுள்ள அணைகள் போதாவென்று 2017 முதல் ராமனாகரா மாவட்டத்தின் மேகதாடு என்ற இடத்தில் அணையைக் கட்ட முயற்சி செய்து கொண்டே இருக்கிறது. இது தமிழகத்தில் காவிரி நுழையும் இடத்திற்கு முன்னால் 10 கி.மீ. தொலைவில் இருக்கிறது. இதிலிருந்து கர்நாடகத்தின் வஞ்சனையான முடிவு நமக்குப் புரிகிறது. டெல்டா விவசாயிகள் நேரத்துக்கு நீர் கிடைக்காமல் விவசாயத்தைக் குறைத்து கொண்டே வருவது எதிர்காலத்தில் நமக்கு உணவுப் பற்றாக்குறையை விளைவிக்கும்.

ஆற்று நீர்ப் பங்கீட்டிற்காக அமைக்கப்பெற்ற எல்லா அமைப்புகளின் தீர்ப்புகளையும் எச்சரிக்கைகளையும் புறம் தள்ளி, பாதிக்கப்படப்போகும் தமிழ்நாட்டு அரசின் ஒப்புதலின்றி எடுக்கப்பட்டிருக்கும் இந்த நகர்வை தமிழக மக்கள் தடுத்து நிறுத்துவோம்! ●

# அன்னை மணியம்மையாரும் வடவர் ஆதிக்க எதிர்ப்பும்!

த.மு.யாழ் திலீபன்

தந்தை பெரியார் அவர்களின் உயிரை மட்டும் அல்ல கடைசி வரையில், பெரியார் இறந்த பிறகும் கொள்கையைக் காப்பாற்றிய உலகம் கண்டிராத பெண் ஆளுமை அன்னை மணியம்மையார். அம்மா பழகவும், பேசவும் தென்றல்தான். ஆனால், அய்யாவின் கொள்கை முடிக்கும் போராட்டம் என்றால் பெரும் எரிமலையாக வெடிக்கும் குணம் கொண்டவர்.

தந்தை பெரியார் அவர்கள் 21.2.1950 ல் "வடவர் சுரண்டல் எதிர்ப்பு மாநாடும்", வடவரிடமிருந்து எப்படி நம் உரிமையைக் காத்துக் கொள்ளுதல் என்று "வகுப்புரிமை மீட்பு மாநாடும்" எதிர்கால நிலையை உணர்ந்து அப்போதே மக்களைப் பக்குவப்படுத்த மாநாடு நடத்தி இருக்கிறார் அந்தத் தொலைநோக்காளர்.

திராவிடர் கழகமோ அல்லது பெரியாருக்குப் பின் தலைமையேற்ற அன்னை மணியம்மையார் அவர்களோ வடவர் ஆதிக்கத்தையும், பார்ப்பனர்களின் புளுகுப் பித்தலாட்டங்களையும் நன்குணர்ந்து தமிழ் மக்களின் கல்வியும், வேலைவாய்ப்பும்தான் நமக்கான ஒரே ஆயுதம், அதுவே தீர்வெனத் தன் பேச்சிலும் எழுத்திலும் மக்களின் கல்விதான் விடுதலையே என்றுரைத்தனர். அப்படியொரு கருத்தை அன்னை மணியம்மையார் அவர்கள் 22.7.1974 அன்று எழுதிய தலையங்கத்தில் குறிப்பிடுகிறார்.

1974 இல் கூடிய தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டத்தில் 80% வேலைவாய்ப்பு உள்ளூர்க்காரர்களுக்கே, அதாவது 15 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பவருக்கு வழங்கப்படும் என்று முடிவெடுக்கப்பட்டது. அப்போதைய தி.மு.கழக அரசு ஆட்சியை சரிவர நடத்தி வந்தாலும் இந்த முடிவென்பது, பல ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் தமிழ்நாட்டு மக்களுக்கே 80% வேலைவாய்ப்பு தரப்பட வேண்டும் என்கிற நமது கிளர்ச்சிக்கு நல்லதொரு வெற்றியாகும்.

ஆனால், அன்னை மணியம்மையார் தந்தை பெரியாரிடம் பயின்றவர் அல்லவா? அம்மாவின் அன்றைய அறிக்கையில் " 15 வருடங்களுக்குக் குறையாமல் குடியிருந்து வருகிறவர்கள் என்கிற சாக்கில் இன்றைக்குப் பல துறைகளில் ஏகபோகமாய் உயர்பதவிகளை அனுபவித்து வருகிற பார்ப்பனர்களும், மலையாளிகளும் மற்றும் பல சமூகத்தினர்களும் மேலும் தங்களது ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டு விடலாம். பெரிய அளவுக்கு அவர்களுக்கே இந்நல்வாய்ப்பு பெரிதும் பயன்பட்டுவிடும் என்பதே நமது பயம்". ஆகவே இதற்கு பதிலாக அதாவது 15 வருடங்களுக்குக் குறையாமல் தமிழ்நாட்டில் குடியிருந்தவர்கள் என்பதற்குப் பதிலாக, இனி ஒரு 15 ஆண்டுகளுக்கு தமிழர் அல்லாதவர்களுக்கு 20% சர்க்கார் உத்தியோகமே வழங்கப்படும் என்பதாகத் தீர்மானம் செய்யப்பட்டிருக்குமேயானால், இடத்தின் அடிப்படையில் இல்லாமல், இனத்தின் அடிப்படையில் தீர்மானம் செய்யப்பட்டிருந்தால் நம் இனம் முன்னேறுவதற்காகத் தீர்மானம் இருந்திருந்தால் தி.மு.கழக ஆட்சிக்குக் 'கிரீடம்' வைத்ததுபோல் இருந்திருக்கும்" என தமிழகத்தின் குரலாய், பெரியாரின் சிந்தனை ஊற்றாய் தமிழ்நாட்டு மக்களின் தாகம் அறிந்து செயல்படும் ஓர் அன்னையாய், பிள்ளைகளின் தவிப்பை உணர்ந்து அடிமை விலங்கொடிக்க, வலி உணர்ந்து தமிழக உரிமைக்கான பாதை காட்டியவர் அன்னை மணியம்மையார்.

இந்திய தேசியம் என்கிற போர்வையில், மாநிலங்களின் தனித்தன்மைகள், பண்பாடு சீரழிவதற்கு முடிவு கட்ட தந்தை பெரியாருக்குப் பின்னால் கிடைத்திட்ட "இராவண லீலா " கண்ட அன்னை மணியம்மையார்தான் இன்று தமிழ்நாட்டில் தமிழருக்கு 100% வேலை கேட்கும் அரசியல் கட்சிகளுக்கு எல்லாம் முன்னோடி. ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian